செ.வெ.எண்: 43/2021 நாள்:.24.07.2021

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திருமுருகன்பூண்டி அருள்மிகு திருமுருகநாதசுவாமி திருக்கோயில் , திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி மற்றும் வீரராகவப்பெருமாள் திருக்கோயில், அவிநாசி அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில் மற்றும் கருவலூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.**

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி, அருள்மிகு திருமுருகநாதசுவாமி திருக்கோயில், அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், கருவலூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி மற்றும் வீரராகவப்பெருமாள் திருக்கோயில்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (24.07.2021) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நேற்று மற்றும் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், மிகவும் வரலாற்று சிறப்பு மிக்க திருத்தலம் ஆகும். திருப்புக்கொளியூர் எனப்படும் அவிநாசித்திருத்தலம் நல்லாற்றுக்குத் தெற்கிலும், முதலைக்குளம் எனப்படும் தாமரைக் குளத்திற்கு வடக்கிலும் அமையப்பெற்று, பெருங்கருணாம்பிகை உடனமர் அவிநாசியப்பர் இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். பிரம்மன், ஐராவதம்,

வெள்ளையானை, தாடகை, வியாதவேடர்கள், சங்ககண்ணன், யஞ்ஞகுத்தன், காகம் மற்றும் தருமசேன மகாராஜா ஆகியோர் முக்தியடைந்த திருத்தலம். இவ்வூரில் வாழ்ந்த கங்காதரசர்மா வேதபதுமை தம்பதிகளின் குமாரன் அவிநாசிலிங்கம் தனது நண்பர்களுடன் அருகிலுள்ள தாமரைக்குளம் என்னும் தடாகத்தில் நீராட சென்றபோது, அவிநாசிலிங்கத்தை முதலை விழுங்கியது. மூன்றாண்டுகளுக்குப் பின் அவிநாசிலிங்கத்தின் நண்பனுக்கு உபநயனம் நடந்தது. அதுசமயம் அவிநாசியப்பரை வழிபட சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது பரிவாரங்களுடன் திருப்புக்கொளியூர் (அவிநாசி) அடைந்தபோது, ஒரு வீட்டில் மங்கல ஒலியும், எதிர்வீட்டில் அழுகுரலும் கேட்டது. அவிநாசிலிங்கத்தின் பெற்றோர்களை சந்தித்து விவரமறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாமரைக்குளக்கரைக்குச் சென்று திருப்பாட்டு முடியும் முன்னே முதலையானது கரையை நெருங்கிவர,உருத்திரன் தாதுவை உண்டுபண்ண, பிரம்மன் உருவத்தை உணடாக்க, யமன் உயிரை கொடுக்க, திருமால் உடலை வளரும்படி செய்ய, புதல்வனை மூன்றாண்டுகள் வளர்ச்சியுடன் முதலை உமிழ்ந்து உடனே மறைந்தது. கல்வெட்டுகளில் முதலைக்குளம் எனக் குறிப்பிடப்படும் தாமரைக்குளக்கரையில் சுந்தரமூர்த்திநாயனார் சுவாமிகளுக்கு கோயில் எழுப்பப்பட்டுள்ளது. சித்திரை மாதத்தில் நடைபெறும் தேர்த்திருவிழாவில் சுவாமி பெரியதேரும், அம்பாள் தேரும், சுப்ரமணியர் சிறியதேரும் உலா வருகின்றன. 5ம் நாள் திருவிழாவில் 63 நாயன்மார்கள் பஞ்சமூர்த்திகளுடன் திருவீதிஉலா சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருக்கோயில் வளாகத்தில் அமைந்துள்ள திருக்குளத்தில் சித்திரைத் தேர்த்திருவிழா 10ம் நாள் தெப்பத்திருவிழா மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. கொங்குசோழர்கள், கொங்குபாண்டியர்கள், போசாளர்கள், விஜயநகர அரசர்கள் ஆகியோர்களின் 32 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

***மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்***
***திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தாவது,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழகம் எங்கும் இருக்கின்ற திருக்கோயில்களில் ஆகம விதிகளின் படி, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடைபெறாமல் இருக்கின்ற திருக்கோயில்கள், குடமுழுக்கு எடுத்துக்கொண்ட திருக்கோயில் பணி தொய்வடைந்திருக்கின்ற நிலையில் இருக்கின்ற திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயல்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பணியாளர்கள் முழுவதுமாக அவர்களை நேரடியாக சந்தித்து, அவர்களுடைய குறைகளை கேட்டு திருக்கோயில்களில் நடைபெற வேண்டிய குடமுழுக்கு பணிகளை விரைவு படுத்தவும், ஏற்கனகவே நடந்து கொண்டிருக்கின்ற பணிகளுக்கு தேவைப்படுகின்ற நிதி மற்றும் நன்கொடையாளர்கள் குறித்த விபரங்களையும், திருக்கோயில் நிலங்களில் முறையாக வாடகை செலுத்தாமல் இருக்கின்ற நிலையையும், அதே போல் ஆக்கிரமிப்புகளிலுள்ள கோயில் நிலங்களையும் கண்டறிந்து அது குறித்த நடவடிக்கைகளை கள ஆய்வு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில், நேற்றைய தினம் சேலம், ஈரோடு இன்றைய தினம் திருப்பூர், கோயமுத்தூர் மாவட்டத்திலே 10 த்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களை ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். இன்றைக்கு, அருள்மிகு திருமுருகநாதசுவாமி திருக்கோயில், அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி மற்றும் வீரராகவப்பெருமாள் திருக்கோயில்களில் சாமி தரிசனம் செய்து இங்கு பணிபுரிகின்ற பணியாளர்களிடம் குறைகளையும், அர்ச்சகர்களின் தேவைகளையும் கேட்டறிந்திருக்கின்றோம். தமிழகத்தை பொருத்தவரை திருக்கோயில்களை தூய்மை நிறைந்த இடமாக நந்தவனங்கள், திருத்தேர்கள் பழுதடைந்தால் அவற்றை சரி செய்கின்ற பணி, திருக்குளங்கள் நல்ல முறையிலே தெப்பம் விடுகிறன்ற அளவிற்கு தண்ணீரை தேக்கி வைக்கின்ற முயற்சிகள், அதே போல் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டிய திருக்கோயில்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்டறிய உத்தரவிட்டு முதற்கட்டமாக சட்டமன்ற பேரவையில் ஆளுநர் உரையில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். அந்தப்பணிகளை முடக்கி விடுவதற்கான மாவட்டந்தோறும் இப்படிப்பட்ட ஆய்வுக்கூட்டங்களை நேரடியாக சென்று களத்திலே ஆராய்ந்து வருகின்றோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்த

காலத்திலும் இல்லாத அளவிற்கு வருமானம் தரக்கூடிய திருக்கோயில்கள், வருமானம் இல்லாத திருக்கோயில்கள் என்ற நிலைகளை மாற்றி அனைத்து திருக்கோயில்களிலும் ஒருகால பூஜை நடத்திட வேண்டுமென்று உத்தரவிட்டுக்கிறார். அந்த வகையிலே தமிழகத்தில் குடமுழக்கு நடைபெறாத திருக்கோயில்களில் இந்தாண்டு மிகப்பெரிய அளவிலே குடமுழக்கு நடத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். எனவே, திருக்கோயில்களில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும், இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்படுமென மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, திருமுருகன்பூண்டி அருள்மிகு திருமுருகநாதசுவாமி திருக்கோயில், திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி திருக்கோயில், திருப்பூர் வீரராகவபெருமாள் திருக்கோயில், அவிநாசி வட்டம் கருவலூர் ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.க.செல்வராஜ் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.நடராஜன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**